[1978 ஆகஸ்ட் 31]

மாயூரம் நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

*வினா 13.—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மாயூரம் நகரில் பாதாள சாக்கடை அமைத்திடும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: மாயவரம் நகராட்சி புதை சாக்கடை திட்டத்தின் ஆய்வு களப்பணிகள் முடிவடைந்து, திட்ட உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

திரு என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாயூரம் நகராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்கு மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? அதோடு, பாதாள சாக்கடைத் திட்டம் எப்போது செயல்படுத்தப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மதிப்பீட்டுத் தொகை ரூ. 235.57 இலட்சம். அரசின் ஆய்வு முடிந்த பிறகு வேலை தொடங்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த மதிப்பீட்டுத் தொகையில் மாயூரம் நகராட்சியிடம் பங்கு தொகை ஏதாவது கேட்கப்பட்டிருக்கிறதா? அப்படி இருந்தால் மாயூரம் நகராட்சி என்ன பதில் கொடுத்துள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இதுமாதிரியான திட்டங்களுக்கு எல். ஐ. சி. யிலிருந்து இரண்டு பங்கும் அரசிடமிருந்து ஒரு பங்கும் பணம் கொடுக்கப்படுகிறது. அந்தப் பணத்தை 30 ஆண்டுக் காலத்தில் திருப்பித் தரவேண்டுமென்று சொல்லி, அதை அந்த நகராட்சி ஏற்றுக் கொண்ட பிறகு தான் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன; அரசும் அனுமதி தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேட்டவலம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கல்.

* வினா 14—திரு. கோ. ரகோத்தமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் வேட்டவலம் பேரூராட்சிக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் வழங்க திட்டம் வகுத்து இன்னும் முடிவடையாமல் உள்ளதா?